# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 27.09.2019**

விசாரணை நடைபெற்ற இடம் : மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
விருதுநகர் மாவட்டம். விருதுநகர்

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2503/SCIC/2019**

| | | |
|---|---|---|
| திரு. R. ராஜ்குமார்.<br>345, நடுத்தெரு, இராமசாமியாபுரம்,<br>கூமாபட்டி 626 133 வத்திராயிருப்பு<br>விருதுநகர் மாவட்டம். | .. | மேல்முறையீட்டாளர் |

/எதிர்

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/<br>வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,<br>சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம்,<br>திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் | .. | பொது அதிகார அமைப்பு |

## ஆணை

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (27.09.2019) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட முகாம் விசாரணைக்கு மனுதாரர் திரு. R. ராஜ்குமார் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு வே. அல்லிராஜ், உதவி வனப் பாதுகாவலர் மற்றும் வன விரிவாக்க அலுவலர், வன உயிரினக்காப்பாளர் அலுவலகம், சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் ஆஜரானார்.

2. அனுமதி பெறாத கடை மூலம் வனத்துறை ஊழியர்கள் பணம் சம்பாதித்து வருகிறார்கள் என்றும், அனுமதி பெறாத கடை வைப்பதற்கு எலுமிச்சை மரம் வெட்டப்பட்டது சம்மபந்தமாகவும், தாணிப்பாறையில் மருத்துவர் அல்லாத நபரைக் கொண்டு மருந்து விற்பனை செய்யப்படுவது குறித்தும் உயர் அதிகாரிகளுக்கு மனுதாரர் புகார் அளித்திருந்ததாகவும் தெரிவித்து அது சம்பந்தமாக 8 இனங்களில் தகவல் வேண்டி தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் 28.11.2018 தேதியிட்டு பொது தகவல் அலுவலர், உதவி வனப்பாதுகாவலர் மற்றும் வனவியல் விரிவாக்க அலுவலர், வனவியல் விரிவாக்க அலுவலகம், மதுரை ரோடு, திருவில்லிபுத்தூர் அவர்களுக்கு மனு அளித்துள்ளார். இது குறித்து 04.12.2018 தேதியிட்டு பொதுத்

தகவல் அலுவலர், வனவியல் விரிவாக்க அலுவலகம், திருவில்லிப்புத்தூர் அவர்கள் மனுதாரருக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் தாங்கள் அனுப்பிய புகார் மனுவினை விசாரணை செய்து அறிக்கை அனுப்ப வன உயிரனக்காப்பாளர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது என்றும், அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றும் தங்களுக்கு தேவைப்படும் தகவல்களை திருவில்லிபுத்தூர் வன உயிரினக்காப்பாளரிடம் கேட்டு பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு மனுதாரர் பொதுத் தகவல் அலுவலர், வன உயிரனக் காப்பாளர், சாம்பல் நிற அணில் வனஉயிரினச் சரணாலயம், திருவில்லிப்புத்தூர் அவர்களுக்கு புதிதாக இது குறித்து ஒரு மனுவினை தாக்கல் செய்து 11 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர், வன உயிரினக்காப்பாளர் அலுவலகம், திருவில்லிப்புத்தூர் அவர்கள் 09.01.2019 நாளிட்டு மனுதாரருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். திருப்தியடையாத மனுதாரர் பிரிவு 19(3)ன் கீழ் ஆணையத்திற்கு தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பேரில் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடம் தான் 11 இனங்களில் தகவல்கள் கோரியதாகவும் ஆனால் பொதுத் தகவல் அலுவலர் இனம் வாரியாக பதில் தராமல் ஒரு பொதுவான பதில் அளித்துள்ளார் என்றும் தான் கோரிய தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்தார். இன்று விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் முதலில் மனு அனுப்பும்போது தான் விசாரணை அதிகாரியாக இருந்ததாகவும் விசாரணை செய்து மேலதிகாரிக்கு தனது விசாரணை அறிக்கையை சமர்பித்ததால் அங்கு மனு செய்து தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்திருந்ததாக தெரிவித்தார்.

4. மனுதாரரின் மனு மற்றும் பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட பதில் ஆகியவற்றை பரிசீலிக்கையில் மனுதாரருக்கு இனம் வாரியாக தகவல்/ஆவணங்கள்/ வழங்கப்படாமல் பொதுவான பதில் வழங்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. **எனவே இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் ப மனுதாரரின் 28.11.2018 மற்றும் 07.12.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களுக்கு முறையான தகவல்களை பதிவஞ்சல் மூலம் வழங்கி அதனை அவர் பெற்றுக் கொண்டார் என்பதற்கான ஆதாரத்தை அனுப்புமாறு பொதுத் தகவல் அலுவலர், வன உயிரனக்காப்பாளர் அலுவலகம், சாம்பல் நிற அணில் வன உரியிரனச் சரணாலயம், திருவில்லிபுத்தூர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், வனவியல் விரிவாக்க அலுவலகம், வனவியல் விரிவாக்க கோட்டம், விருதுநகர் ஆகியோருக்கு உத்தரவிடப்பட்டு இவ்வழக்கு முற்றாகப்படுகிறது.**

**(ஒம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண். SA 2503/SCIC/2019**</u>

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்/
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம்,
திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்

பொதுத் தகவல் அலுவலர்,
வனவியல் விரிவாக்க அலுவலகம்,
வனவியல் விரிவாக்க கோட்டம்,
விருதுநகர் (இ)திருவில்லிபுத்தூர்

<u>**மனுதாரர்**</u>
திரு. R. ராஜ்குமார்.
345, நடுத்தெரு, இராமசாமியாபுரம்,
கூமாபட்டி 626 133 வத்திராயிருப்பு
விருதுநகர் மாவட்டம்.

*JJ/PA 03.10.2019*